1974 சனவரி 23]

வேண்டுமென்றிருக்கிறோம். இந்த 56,42,000 ரூபாயை அவர்கள் திருப்பித் தந்தால் அதை எவ்வாறு விவசாயிகளுக்குச் சலுகைகளாகக் கொடுக்க முடியும் என்பது ஆராயப்படும்.

திரு. எம். தேவராசன் : கோல்டன் நெமோடோட் நோய் இந்த தாசானிட் மருந்தால் சரிசெய்யப்பட்டு வருகிறது. இதற்காக விவசாயிகளிடமிருந்து 100 ரூபாய் வீதம்தான் முன்னாலே வசூலிக்கப்பட்டது. இப்பொழுது 250 ரூபாயாக அதை ஆக்கியிருக்கிறார்கள். ஆதலால் விவசாயிகளுக்கு சிரமங்கள் இருக்கின்றன, எனவே பழையபடி இருந்த அந்த 100 ரூபாய் வீதமே 20 ஏக்கருக்கு வசூலிக்கச் செய்வதற்கு அரசாங்கம் உத்திரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நண்பர் அவர்கள் சொன்ன கருத்து ஆராயப்படும். நான் ஏற்கெனவே சொன்னபடி. இந்த மருந்து நாமாக வரவழைத்ததாக இருந்தாலும்கூட இந்தோ-ஜெர்மன் ப்ராஜக்ட் அடிப்படையிலே முற்றிலும் இனமாகக் கொடுக்கப்படுகிறது. ஆனால் அதற்கு வரி என்ற அளவிலே பெருத்த தொகையைக் கொடுக்கிறோம். 56,42,000 ரூபாய் என்று சொன்னேன். அதனால்தான் விவசாயிகளிடமிருந்து அதிகமாக வசூலிக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தை அமல் நடத்துவதினாலே அரசுக்கு எந்தவிதமான லாபமும் கிடையாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோதுமை ஒதுக்கீடு

* **112 வினா.—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்படும் கோதுமையின் மாதாந்திர சராசரி அளவு எவ்வளவு ?

(இ) 1973 ஆம் ஆண்டில், முதல் நான்கு மாதங்களில் வந்து சேர்ந்த கோதுமையின் அளவு எவ்வளவு? மாதவாரியாக ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) 1972-ம் ஆண்டில் சராசரியாக மாதம் ஒன்றுக்கு 35,000 டன் கோதுமை தமிழ் நாட்டிற்கு மத்திய அரசினரால் ஒதுக்கப்பட்டது.

(இ)

சனவரி 1973	15,000
பிப்ரவரி 1973	15,000
மார்ச் 1973	15,000
ஏப்ரல் 1973	15,000

Distribution of wheat

* 113 Q.—THIRU K. SUPPU : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state the basis on which the wheat allotted to Tamil Nadu by the Food Corporation of India is being distributed to the public ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : ஒரு குறிப்பிட்ட அளவு பொது மக்களுக்கு முழு கோதுமையாக வழங்கப்படுகிறது. எஞ்சிய கோதுமையை மைதா, ரவை, ஆட்டா, கோதுமைத் தவிடு போன்ற பொருட்களாக மாற்றப்படுகிறது. சில்லரை வியாபாரிகளுக்கும், பங்கீட்டு அட்டைகளின் பேரில் பொது மக்களுக்கும் தமிழ்நாடு உணவுப்பொருள் வழங்கு கழகத்தின் மூலம் கோதுமை வழங்கப்படுகிறது.

சென்னை மாநகரத்திலும், மாவட்டங்களிலும் வழங்கப்படும் கோதுமை அளவு விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

கோதுமை

கோதுமை உண்பவர்கள்	..	6 கிலோ கிராம் கோதுமை.
நீரிழிவு நோயாளிகள்	..	5 கிலோ கிராம் கோதுமை.

கோதுமைப் பொருட்கள்.

(அ) திங்களொன்றுக்கு ரூ. 300-ம் அதற்கு குறைவாகவும் வருவாய் உடைய குடும்பங்கள்.	மைதா 1 கிலோ கிராம் ரவை 1 கிலோ கிராம்.
(இ) திங்களொன்றுக்கு ரூ. 300-ம் அதற்கு மேல் வருவாய் உடைய குடும்பங்கள்.	மைதா 2 கிலோ கிராம் ரவை 2 கிலோ கிராம்.